இணைப்பு

24-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 639 (645) க்கான விடையைக் காண்க.)

அ மற்றும் ஆ. விவரம் வருமாறு.

(1) இந்து ஆதி திராவிடர்களுக்கான திட்டம் :

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்பு உள்ளடக் கத்திட்டம் தீட்டப்பட்டு 1980-81 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதில் ஓர் அம்சமாக கூட்டு கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் (Cluster Development) Programmes செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு சிறப்பு நிதி உதவி (Special Central Assistance) அளித்து வருகிறது, இந்த சிறப்பு மத்திய உதவித்தொகை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகத்திற்கு அளிக்கப்படுகிறது. அக்கழகம் அத் தொகையை மேற்படி திட்டங்களை செயல்படுத்தும் துறைகளுக்கு அளிக்கிறது. மாவட்டத்திற்கு ஒரு ஒன்றியம் வீதம் 1982-83-ல் 15 ஒன்றியங்களும் 1984—85-ல் 15 ஒன்றியங்களும், 1985—86-ல் 15 ஒன்றியங்களும், தேர்ந்தெடுக்கப்பட்டு மேற்படி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

	மாவட்டம்.	1982—83
1.	செங்கல்பட்டு	மீஞ்சூர்.
2.	வட ஆற்காடு	நெமிலி
3.	தர்மபுரி	அரூர்
4.	சேலம்	சேந்தமங்கலம்
5.	பெரியார்	வெள்ளக்கோயில்
6.	கோவை	பெரியநாயக்கன்பாளையம்
7.	நீலகிரி	குன்னூர்.
8.	தென்னாற்காடு ..	மங்கலூர்
9.	திருச்சி ..	வேப்பூர்.
10.	தஞ்சாவூர்	கொள்ளிடம்
11.	புதுக்கோட்டை ..	விராலிமலை
12.	இராமநாதபுரம் ..	கமுதி
13.	மதுரை	வேடசந்தூர்
14.	திருநெல்வேலி ..	ஒட்டப்பிடாரம்
15.	கன்னியாகுமரி ..	அகஸ்தீஸ்வரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாவட்டம் (1)	1984—85 (2)	1985—86 (3)
1 செங்கல்பட்டு	அச்சிறுபாக்கம்	ஸ்ரீ பெரும்புனர்
2 வட ஆற்காடு	செங்கம்	வந்தவாசி
3 தர்மபுரி	பாப்பிரெட்டி பட்டி	மொராப்பூர்
4 சேலம்	தலைவாசல்	சங்கரி
5 பெரியார்	அ ந்தியுர்	தாராபுரம்
6 கோவை	அன்னூார்	அவிநாசி
7 நீலகிரி	உதகை	கோத்தகிரி
8 தென்னாற்காடு	உளுந்தூர் பேட்டை	வானூர்
9 திருச்சி	ஜெயம்கொண்டம்	உப்பிலியாபுரம்
10 தஞ்சாவூர்	வலங்கையம்மான்	கோட்டூர்
11 புதுக்கோட்டை	கரம்பக்குடி	கந்தர்வக்கோட்டை
12 இராமநாதபுரம்	காளையார்கோயில்	இராமநாதபுரம்
13 மதுரை	நிலக்கோட்டை	ஆண்டிப்பட்டி
14 திருநெல்வேலி	நான்குநேரி	சங்கரன்கோயில்
15 கன்னியாகுமரி	தோவாளை	குருந்தன்கோடு

2. மேற்கண்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் சில முக்கிய திட்டங்களாவன :

1. கிராமிய நூற்பு நிலையம்.
2. நேபாளித்தறி.
3. பாய்முடைதல்.
4. கையினால் காகிதம் செய்தல்.
5. காலணிகள் செய்தல்.
6. கல்லுடைக்கும் அலகுகள் நிறுவுதல்.
7. பட்டு வளர்த்தல்.
8. ஊரக நெசவு.
9. பீடி தயாரித்தல்.
10. செங்கல் தயாரித்தல் முதலியன.

3. மேற்கண்ட திட்டங்கள், கதர் மற்றும் கிராமக் கைத் தொழில்துறை, கதர் மற்றும் துணி நெய்தல் துறை, கூட்டுறவுத் துறை, தொழில் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4. 1982—83-ம் ஆண்டில் இத்திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 8·12 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனா 9,719 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். 1984ல்—85-ல்

இத்திட்டங்களுக்காக ரூ. 5·59 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் 7,025 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைவர். 1985–86-ம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக இரண்டு ஒன்றியங்கள் அதாவது தஞ்சாவூர் மாவட்டத்தில் கோட்டூர் ஒன்றியத்திற்கும் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி ஒன்றியத்திற்கும் ரூ. 5·00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 125 ஆதி திராவிட குடும்பங்கள் இந்த இரண்டு ஒன்றியங்களிலும் பயனடைவார்கள். மீதமுள்ள 13 ஒன்றியங்களில் இத்திட்டங்களை செயல்படுத்த ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகிறது.

(2) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தமிழ்நாட்டில் பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இப்பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் 1976–77-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகின்றன. மேற்கண்ட பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களை வறுமைக் கோட்டை தாண்டச் செய்வதுதான் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

2. 1980-81-ம் ஆண்டிலிருந்து அவர்களின் மேம்பாட்டிற்காக (1) விவசாயம் மற்றும் தோட்டக்கலை, (2) கதர் மற்றும் கிராமத் தொழில், (3) கால்நடை பராமரிப்பு, (4) பட்டு வளர்ப்பு ஆகிய குடும்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும், (1) கல்வி, (2) சாலை வசதி, (3) சுகாதாரம், (4) சமூக நலம், (5) மருத்துவம், (6) குடிநீர் வசதி, (7) மின்வசதி, (8) சிறுபாசனம், (9) மண்வளப் பாதுகாப்பு ஆகிய பகுதி மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவர்களின் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 20·23 கோடியாகும். மேற்கண்ட திட்டங்களின் மூலம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 11,235 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத் தாண்ட வழிவகைகள் செய்யப்பட்டன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 46,979 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத் தாண்ட ரூபாய் 69·99 கோடி செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன. 1985–86-ம் ஆண்டில் ரூ. 6·52 கோடி செலவில் 9,309 பழங்குடியினர் வறுமைக் கோட்டைத்தாண்ட திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன, இத்திட்டத்தின் கீழ் 1986–87-ல் ரூ. 9·46 கோடி செலவிடப்படும்.